# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, நீலகிரி மாவட்டம்

**<u>அறிவிக்கை எண் 01 / 2024 நாள் 02.05.2024</u>**

நீலகிரி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவானது சட்ட தன்னார்வலராக சேவை புரிய விருப்பம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது. நீலகிரி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, உதகமண்டலம் மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழு, குன்னூர், கூடலூர், பந்தலூர் மற்றும் கோத்தகிரியில் தேசிய சட்டபணிகள் ஆணைக்குழுவின் திட்டங்களை செயல்முறைப்படுத்த தயார் செய்யப்படும் சட்ட தன்னார்வலர்களுக்கான பட்டியலில் சேர தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். விண்ணப்பங்களை கீழ்குறிப்பிட்ட தகுதியுடைய நபர்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 20.05.2024 மாலை 5 மணிக்குள் கீழ்குறிப்பிட்ட முகவரியில் உள்ள அலுவலகத்திற்க்கு கிடைக்கும் வகையில் அளிக்கவும்.

மேற்படி சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை சேவை மட்டுமே. உத்தியோகம் இல்லை. முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்க்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை. சேவைக்கு தகுந்த வெகுமானம் மட்டுமே அளிக்கப் படும் என்பதை தெரிவித்து கொள்கிறோம். பின்வரும் வகைகளின் கீழ் வருபவர்களில் பொதுமக்களுக்கு சேவை செய்ய ஆர்வமுள்ளவர்கள் விண்ணபிக்கலாம்.

1. ஆசிரியர்கள் ( ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட )
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
3. MSW மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
4. அங்கன்வாடி தொழிலாளர்கள்
5. மருத்துவர்கள்
6. மாணவர்கள் மற்றும் சட்டம் படிக்கும் மாணவர்கள் (அவர்கள் வழிக்கறிஞர்களாக சேரும் வரையில்)
7. அரசியல் சாராத சேவை சார்ந்த தொண்டு நிறுவனங்கள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள்
8. மகளிர் குழுக்களின் உறுப்பினர்கள்

9. நலிந்தவர்களுக்கான சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள்
10. அடிப்படை கல்வி தகுதியுடைய சேவை மனப்பான்மை உள்ளவர்கள்

நேர்காணல் தேதி மற்றும் இடம் விண்ணப்பதாரரின் செல்போன் எண்ணிற்கு WhatsApp மூலம் தெரிவிக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நீலகிரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகத்தை நேரிலோ அல்லது 0423 – 2444277 என்ற தொலைபேசி எண்ணிலோ அழைக்கலாம்.

விண்ணப்பத்தினை நீலகிரி மாவட்ட நீதிமன்றத்தின் இணையதளத்தில் (https://nilgiris.dcourts.gov.in/) இருந்து பதிவிறக்கம் செய்து உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கவும்.

வரும் 20.05.2024 மாலை 5 மணிக்கு மேல் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

**முழுமையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி :**

செயலாளர்,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
மாற்று முறை தீர்வு மையம்,
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்– 643006

இங்ஙனம்,

ஒம்/–
செயலாளர்,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்